பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kalaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 சித்திரை 29 புதன்கிழமை 12.05.2021 கதிர் 54

## மேலும் 13 இடங்கள் தனிமைப்படுத்தல்!

இலங்கையில் இன்று காலை முதல் மேலும் 13 கிராம சேவகர் பிரிவுகள் தனிமைப் படுத்தப்பட்டுள்ளன.

இதற்கமைய, கொழும்பு மாவட்டத்தின் பிலியந்தல் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொல முன்ன மற்றும் மாம்பே மேற்கு கிராம சேவகர் பிரிவுகளும், கம்பஹா 2

### நாளை இரவு முதல் திங்கள் அதிகாலை வரை

# மூன்று நாள்களுக்கு மக்கள் நடமாடத் தடை



### இராணுவத் தளபதி அறிவிப்பு

**(ந.லோகதயாளன்)**

**இலங்கையில் நாளை இரவு முதல் மூன்று நாள்களுக்கு முழு நேரப் பயணக் கட்டுப்பாடு அமுல்படுத்தப்படுகின்றது என அறிவிக்கப்பட் டுள்ளது.** 2

## மேலும் 435 பேர் கைது!

தனிமைப்படுத்தல் விதிமுறை களை மீறியமை தொடர்பில் மேலும் 435 பேர் கைது செய் யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார்..

கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் 30 ஆம் திகதி தொடக்கம் இதுவரையான காலப் பகுதியில் 8 ஆயிரத்து 299 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார். 2

## பிரசவத்தின் பின் தாய் உயிரிழப்பு

### யாழில் சம்பவம்

**(ந.லோகதயாளன்)**

யாழ்ப்பாணம்,மே.12

குழந்தைப்பேற்றிற்காக யாழ்ப் பாணம்போதனாவைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்ட தாயார் ஒருவர் இன்று பரிதாபகரமாக உயிரிழந்தார்.

ஜீவசுமன் மேரி சலுயா, என் னும் 29 வயதையுடைய, தெல் லிப்பளை பார் ஒழுங்கையைச் சேர்ந்தவரே உயிரிழந்தவராவார்.

இரண்டாவது குழந்தைப்பேறு காலத்தில் இருதய சிகிச்சை பெற்று வந்த இந்தத் தாயார் ஓர் ஆண் குழந்தையை பிரசவித்து சிறிது நேரத்தில் இருதய 2

## அடையாள அட்டையின் இறுதி இலக்கத்தின்படி வெளியே வர முடியும்



நாட்டில் நாளை முதல் மே 31ஆம் திகதி வரை தேசிய அடை யாள அட்டையின் இறுதி இலக்கத்தின் அடிப்படையிலேயே வெளியே செல்ல முடி யும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதிப் பொலிஸ்மா அதி பருமான அஜித் றோஹண தெரிவித்தார்.

கொழும்பில் இன்று நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். 2

## அலரி மாளிகையில் மஹிந்தவை அவசரமாகச் சந்தித்த சீனத் தூதர்

### கொரோனாத் தடுப்பு தொடர்பில் முக்கிய பேச்சு



பிரதமர் மஹிந்த ராஜபக் ஷவை இலங்கைக்கான சீனத் தூதுவர் ஷீ ஜன்ஹொங் இன்று நேரில் சந்தித்துப் பேச்சு நடத் தியுள்ளார்.

அலரி மாளிகையில் நடை பெற்ற இந்தச் சந்திப்பில், இரு நாடுகளுக்கும் இடையிலான அரசியல், பொருளாதார நட்புறவு குறித்து கலந்துரையாடப்பட் டுள்ளது. 2

## இலங்கையில் இருந்து ஐந்து நாடுகளுக்கான பயணிகள் விமான சேவைகள் இடைநிறுத்தம்

கொரோனா வைரஸ் தொற்று நிலைமையால் இன்று அதிகாலை முதல் இலங்கையில் இருந்து முன் னெடுக்கப்பட்டு வந்த ஐந்து வெளிநாடு களுக்கான பயணிகள் விமான சேவைகள் இடை நிறுத்தப்பட்டுள் ளன என்று கட்டுநாயக்க விமான நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித் தார்.

அதன்படி, ஐக்கிய அரபு இராச்சி யத்தின் டுபாய் மற்றும் ஷார்ஜா பிராந்தியங்களுக்கான விமான சேவைகளும், சிங்கப்பூர், இத்தாலி, பிலிப்பைன்ஸ் மற்றும் ஆஸ்திரே லியா ஆகிய நாடுகளுக்கான விமான சேவைகள் இன்று அதிகாலை முதல் நிறுத்தப்பட்டுள்ளன.

எனினும், இந்த நாடுகளிலிருந்து இலங்கைக்கு வருவதற்குப் பயணி கள் தொடர்ந்தும் அனுமதிக்கப்படுகின் றார்கள்.

இதேவேளை, பயணிகள் விமான சேவைகள் இடைநிறுத்தப்பட்டுள்ள குறித்த ஐந்து நாடுகளுக்கும் சரக்கு விமான சேவைகளை முன்னெடுக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

## 4 மாதக் குழந்தை திடீரென மரணம்

**(ந.லோகதயாளன்)**

யாழ்ப்பாணம் கச்சேரியடியைச் சேர்ந்த 4 மாதக் குழந்தை ஒன்று இன்று அதி காலை பரிதாபகரமாக உயிரிழந்தது .

யாழ்ப்பாணம் கச்சேரி வீதியில் வசிக் கும் தாயார் ஒருவருக்கு கடந்த 4 மாதங் களிற்கு முன்னர் இரட்டைக் குழந்தைக பிறந்துள்ளன.

இவர்களை வழமை போன்று அதி காலை 12 மணியை தாண்டிய நிலையில் பால் ஊட்டி தாயார் நித்திரையாக்கினார். அதிகாலை ஒரு குழந்தையின் அசை வைக் காணாது பதற்றத்துடன் யாழ்ப்பா ணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற சமயம் குழந்தை உயி ரிழந்திருந்ததை மருத்துவர் உறுதி செய் தார்.

உயிரிழந்த குழந்தையின் மரண விசாரணையை மேற்கொண்ட திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம் குமார் பிரேத பரிசோதனை மேற்கொள்ள உத்தரவிட்டார்.

## தடுப்பூசி கொள்வனவுக்கு 136 கோடி ரூபா ஒதுக்கீடு



இலங்கையில் பரவி வரும் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் விதமாக சீன, ரஷ்ய, அமெ ரிக்க தடுப்பூசிகளைப் கொள் வனவு செய்வதற்காக 136 கோடி ரூபா நிதி ஒதுக்கப்பட் டுள்ளது எனவும், தேவைப் படும் பட்சத்தில் மேலதிக மாக நிதி ஒதுக்க முடியும் எனவும் சுகாதார அமைச் சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சீன தடுப்பூசிகளைக் கட்டம் கட்டமாகக் கொண்டு வரும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், முதல் கட்டத்தில் சீனா வழங்கியுள்ள 15 ஆயிரம் சினோபோர்ம் தடுப்பூசிகள் 2

## பதுளை விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

### 10 பேர் படுகாயம்



பதுளையிலிருந்து தியனகல தோட்டத் துக்கு ஆள்களை ஏற்றிச் சென்ற வான் ஒன்று பதுளை - பசறை மூன்றாம் கட்டை பகுதியில் வைத்து தடம்புரண்டு விபத்துக் குள்ளாகியதில் ஒருவர் பலியாகியுள்ளார். மேலும் 10 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் பதுளை வைத்தி யசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட் டுள்ளனர். விபத்தில் வானின் சாரதியே பரி தாபகரமாக பலியாகியுள்ளார். விபத்து தொடர்பாக பதுளைப் பொலிஸார் விசாரணை களை மேற்கொண்டு வருகின்றனர்.

## கொழும்பில் கொரோனா உக்கிரம்

நாட்டில் இன்று காலை நிலைவரப் படி, கடந்த 24 மணி நேரத்தில் மொத்தம் 2 ஆயிரத்து 568 நபர்க ளுக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இவர்களில் அதி கமான தொற்றாளர்கள் கொழும்பில் பதிவாகியுள்ளனர்.

அதன்படி, கொழும்பு மாவட்டத் தில் மாத்திரம் 606 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப் பட்டுள்ளது.

இதற்கமைய, கொள்ளுப்பிட்டி யில் 14 பேரும், 2

## பதுளை விபத்தில் ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நாரஹேன்பிட்டியில் 18 பேரும், பொரளையில் 10 பேரும், கொழும்பு நகர எல்லையில் 53 பேரும், அவிசாவளையில் 22 பேரும், பம்பலப்பிட்டியில் 14 பேரும், பொரலஸ்கமவில் 19 பேரும், கொதடுவையில் 29 பேரும், ஹோமாகமவில் 15 பேரும், கொட்டாவையில் 30 பேரும், பிலியந்தலையில் 36 பேரும், தலங்கமையில் 19 பேரும், வெலிகடையில் 18 பேரும் மற்றும் வெல்லம்பிடியில் 19 பேரும் இவ்வாறு பதிவாகியுள்ளனர்.

இதேவேளை, 300 பேர் கம்பஹா மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என குறிப்பிடப்பட்டுள்ளது.

அவர்களில், தொம்பே பிரதேசத்தில் 22 பேரும், துன்கல்பிடிய பிரதேசத்தில் 24 பேரும், ஜா - எல பிரதேசத்தில் 31 பேரும், கட்டானை பிரதேசத்தில் 18 பேரும், கட்டுநாயக்க பிரதேசத்தில் 62 பேரும், கொச்சிகடை பிரதேசத்தில் 15 பேரும், மினுவங்கொடை பிரதேசத்தில் 13 பேரும், நீர்கொழும்பு பிரதேசத்தில் 35 பேரும் மற்றும் நிட்டம்புவ பிரதேசத்தில் 11 பேரும் பதிவாகியுள்ளனர்.

இதேபோல் களுத்துறை மாவட்டத்தில் இருந்து 417 தொற்றாளர்கள் இனங் காணப்பட்டுள்ளனர்.

மேலும், குருநாகல் மாவட்டத்தில் 196 தொற்றாளர்களும், காலி மாவட்டத்தில் 148 தொற்றாளர்களும், மாத்தளை மாவட்டத்தில் 108 தொற்றாளர்களும் மற்றும் கண்டி மாவட்டத்தில் 110 தொற்றாளர்களும் பதிவாகியுள்ளனர்.

## தடுப்பூசி கொள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பொதுமக்களுக்கு ஏற்றும் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இன்னும் இரு வார காலத்தில் மேலும் 65 ஆயிரம் தடுப்பூசிகளை சீனாவிடம் இருந்து பெற்றுக் கொள்ள அரசு உடன்படிக்கை செய்துள்ளது.

இந்நிலையில் ஜூலை மாதம் முதலாம் வாரத்தில் அமெரிக்காவின் பைசர் தடுப்பூசிகளைக் கொள்வனவு செய்யவும் இணக்கம் காணப்பட்டுள்ளது.

அதற்கமைய ஐந்து லட்சம் தடுப்பூசிகள் ஜூலை மாதத்தில் இலங்கைக்குக் கிடைக்கவுள்ளன. இவ்வாறு தடுப்பூசிகளைக் கொள்வனவு செய்யவே தற்போது அரசு 136 கோடி ரூபா நிதியை ஒதுக்கியுள்ளது - என்றார்.

## பிரசவத்தின் பின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நோயால் பெரும் சிரமப்பட்டுள்ளார். இதனால் உடனடியாக அவசர சிகிச்சைப் பிரிவிற்கு மாற்றப்பட்டார்.

அவசர சிகிச்சைக்கு மாற்றப்பட்டு 2 மணி நேரம் வைத்தியர்களின் பெரும் முயற்சி பலனின்றி பரிதாபகரமாக உயிரிழந்தார். குழந்தை நலமாகவே உள்ளது.

## அலரி மாளிகை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சீன ஜனாதிபதியின் வாழ்த்துக்களை சீனத் தூதுவர், பிரதமர் மஹிந்தவுக்கு இதன்போது எத்திவைத்துள்ளார்.

இலங்கையில் கொரோனாத் தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பாக இந்தச் சந்திப்பில் பிரதமர் மஹிந்த எடுத்துக் கூறியுள்ளார்.

இலங்கைக்கு சீனத் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்வது தொடர்பாகவும் இந்தக் கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

## அடையாள அட் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஒற்றை இலக்கம் உடைய நாளாக இருந்தால் தேசிய அடையாள அட்டையின் இறுதி இலக்கம் 1,3,5,7,9 என இருப்பவர்கள் வெளியே வரலாம். நாளை 13 ஆம் திகதி மேற்படி நபர்கள் வெளியே வரமுடியும்.

இரட்டை இலக்கம் உடைய நாளாக இருந்தால் 2,4,6,8 ஆகிய இலக்கமுடையவர்கள் வரமுடியும். இறுதி இலக்கம் 0 ஆக இருந்தால் அது இரட்டை நாளுக்குரிய இலக்கமாகக் கருதப்படும்.

எனவே, வெளியே வருபவர்கள் அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டு, சாரதி அனுமதிப் பத்திரத்தை கைவசம் வைத்திருக்க வேண்டும். தேசிய அடையாள அட்டை இல்லாத பட்சத்திலேயே கடவுச்சீட்டு, சாரதி அனுமதிப் பத்திரங்களைப் பயன்படுத்த முடியும்.

அத்தியாவசிய சேவையை முன்னெடுப்பவர்கள், தொழிலுக்குச் செல்லும் அரச மற்றும் தனியார் துறையினருக்கு இந்த நடைமுறை பொருந்தாது. பொருள்கள் கொள்வனவு உட்பட இதர விடயங்களுக்காக வருபவர்களுக்கே பொருந்தும்.

அதேவேளை, கர்ப்பிணிப் பெண்கள், இருதய நோயாளிகள் உட்பட அத்தியாவசிய தேவை நிமித்தம் வைத்தியசாலைகளுக்கு செல்பவர்களுக்கும் இந்த நடைமுறை பொருந்தாது - என்றார்.

## மூன்று நாள்க ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அதற்கமைய நாளை வியாழக்கிழமை இரவு 11 மணி முதல் எதிர்வரும் 17ஆம் திகதி திங்கட்கிழமை அதிகாலை 4 மணி வரையில் நாடு தழுவிய முழு நேரப் பயணக் கட்டுப்பாடு அமுல்படுத்தப்படுகின்றது எனக் கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா அறிவித்துள்ளார்.

எனினும், இக்காலப்பகுதியில் அத்தியாவசிய சேவைகள் தடையின்றி முன்னெடுக்கப்படும் எனவும், மேல் மாகாணத்தில் செலுத்தப்படும் கொரோனாத் தடுப்பூசி தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் நோயாளிகள் அவசர தேவை நிமித்தம் வைத்தியசாலைகளுக்குச் செல்ல முடியும் எனவும், அதற்குப் பயணத் தடை பொருந்தாது எனவும் இராணுவத் தளபதி மேலும் கூறியுள்ளார்.

இதேநேரம், இன்று முதல் மே மாதம் 31ஆம் திகதி வரை இரவு 11 மணி முதல் அதிகாலை 4 மணி வரையிலான பயணத் தடை நாடு தழுவிய ரீதியில் அமுல்படுத்தப்பட இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

## மேலும் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் மாகாணங்களுக்கிடையில் அரசால் விதிக்கப்பட்டுள்ள பயணக் கட்டுப்பாடுகளை உரிய முறையில் பின்பற்றுமாறும் பொதுமக்களிடம் அவர் கோரிக்கை விடுத்தார்.

முகக் கவசங்களை உரிய முறையில் பயன்படுத்துமாறும் அவர் கேட்டுக்கொண்டார்.

## மேலும் 13 இடங் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மாவட்டத்தின் மஹபாகே பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எலபிட்டிவல நவ மஹர கிராமம் மற்றும் மகுல் பொகுன கிராமத்தின் மகுல் பொகுன வீதி கிராம சேவகர் பிரிவுகளும் முடக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, காலி மாவட்டத்தின் இமதுவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட திக்கும்புர கிராம சேவகர் பிரிவு மற்றும் அஹுங்கம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அட்டானிகத கிராம சேவகர் பிரிவு, இரத்தினபுரி மாவட்டத்தின் பெல்மடுல்ல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சன்னஸ்கம, தொட்டகஸ்வின்ன மற்றும் கொடகம கிராம சேவகர் பிரிவுகளும் முடக்கப்பட்டுள்ளன.

அத்துடன் அம்பாந்தோட்டை மாவட்டத்தின் சூரியவெவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சூரியவெவ நகர் கிராம சேவகர் பிரிவு, கேகாலை மாவட்டத்தின் புளத்கொஹுபிட்டிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உடபொத்த மற்றும் கெந்தாவ கிராம சேவகர் பிரிவுகளும் முடக்கப்பட்டுள்ளன.

இந்தப் பிரதேசங்களின் கொரோனாத் தொற்றுப் பரவல் நிலைமையைக் கருத்தில்கொண்டே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது .

விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம்-
076 443 8622




நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# இணையவழிக் கல்வி தோல்வியா?

**தொழிலாளர்களின் – தமது உறுப்பினர்களின் – நலன் பேணுவதும் அதற்காகக் குரல் எழுப்புவதும் தொழிற்சங்கங்களின் பொறுப்பு. கடப்பாடு. அதில் இரண்டு கருத்துக்கு இடமில்லை.**

**ஆனால், தொழிலாளர் நலன் என்ற பெயரில் அநீதிக்காக – தவறுக்காக – பிழைகளுக்காக – குரல் எழுப்பக் கூடாது.**

**கடவுச் சீட்டுகளில் இருந்து பல விடயங்களில் 'பயமோமெட்ரிக்' முறைமை கையாளப்படுகின்றது. ஆனால் இயந்திரங்களில் கைவிரல் ரேகைப் பதிவை அடையாளப்படுத்துவதன் மூலம் தினவரவுப் பதிவை மேற்கொள்ளும் முறைமையைக் கடுமையாக எதிர்த்த தொழிற்சங்கங்கள் நம் மத்தியில் உண்டு. நியாயமான முறையை தொழிற்சங்கப் பலம் என்ற ஒன்றை வைத்துக் கொண்டு எப்படியும் எதிர்க்கலாம் என்ற போக்கு இது.**

**தொழிற்சங்கங்கள் இப்படி அத்துமீறி செயற்பட்ட – செயற்படுகின்ற – காலங்களில் நீதிமன்றங்கள் அவற்றில் தலையிட்ட பல சந்தர்ப்பங்கள் உள்ளன. தொழிற்சங்க நடவடிக்கைகளில் நீதிமன்றம் தலையீடு செய்து நீதியை நிலைநிறுத்தும் நிலைமை கூட ஏற்படுவதுண்டு.**

**கொரோனாப் பெருந்தொற்று நெருக்கடி சமயத்தில் அந்த நெருக்கடியினால் பெரிதும் பாதிப்புற்றிருக்கும் பிரதான துறைகளில் ஒன்று கல்வி. நமது நாட்டில் மட்டுமன்றி உலகளாவிய ரீதியில் பெரும் நெருக்கடிக்குள்ளாகியிருக்கும் பிரதான துறை இதுதான்.**

**இவ்விடயத்தை ஒட்டி நாட்டின் முன்னணி ஆசிரியர் சங்கங்களில் ஒன்றான இலங்கை ஆசிரியர் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கை பலரின் புருவத்தையும் உயர்த்தச் செய்திருக்கின்றது.**

***"தொற்றுப் பரவலால் ஸ்தம்பிதமடைந்துள்ள பாடசாலை மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளுக்கு எந்தவொரு பயனுள்ள ஏற்பாடுகளையும் அரசாங்கம் மேற்கொள்ளவில்லை"*** **என அந்த ஆசிரியர் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.**

**இக் கருத்து சரியாகவும் இருக்கலாம். பிழையாகவும் இருக்கலாம். அதுவல்ல விடயம்.**

***"எந்தவொரு பயனுள்ள ஏற்பாட்டையும் மேற்கொள்ளாத அரசு அதற்குப் பதிலாக தோல்வியுற்ற இணைய வழிக் கல்வியை வழங்குவதற்கு பல்வேறு வழிகளில் ஆசிரியர்களுக்கு அழுத்தம் கொடுக்கின்றது."*** **என்று கூறியிருப்பதுதான் அதிர்ச்சியளிப்பதாக இருக்கின்றது.**

***"தோல்வியடைந்த திட்டமெனத் தெரிந்தும் ஆசிரியர்களை அதனைச் செய்யும்படி கட்டாயப்படுத்துவது கல்வி அதிகாரிகளின் ஒரே கொள்கையாக மாறியுள்ளது."*** **எனச் சுட்டிக் காட்டியுள்ள சிரேஷ்ட தொழிற்சங்கத் தலைவர் ஜோசப் ஸ்டாலின்,** ***"பாடசாலைகள் மீண்டும் ஆரம்பிக்கும் வரை முறையான அட்டவணை மூலம் தொலைக்காட்சியைப் பயன்படுத்தி கல்வியை வழங்குவது நடைமுறைச் சாத்தியமான திட்டமாகும்"*** **எனக் குறிப்பிட்டிருக்கின்றார் என்று கூறப்படுகின்றது.**

***"தோல்வியுற்ற இணைய வழிக் கல்வி"*** **என்ற கூற்றின் ஊடாக கல்வித் துறையின் சிரேஷ்ட தொழிற்சங்கவாதியான ஜோசப் ஸ்டாலினும் அவரது இலங்கை ஆசிரியர் சங்கத்தினரும் என்ன கூற வருகின்றனர் என்பது குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.**

**இணைய வழிக் கல்வி முறைதான் இன்று உலகளாவிய ரீதியில் பரந்துபட்டு அணுகப்படுகின்றது. கொவிட் பெருந்தொற்றுக் கால நெருக்கடியை கல்வித்துறை எதிர்கொண்டு தாண்டுவதற்கான ஒரே மார்க்கமாக – திறவுகோலாக – பல நாடுகளிலும் அணுகப்படும் முறைமை அதுவாகத்தான் இருக்கின்றது.**

**அத்தகைய இணையவழிக் கல்வி தோல்வியுற்ற முறைமை என்று நிபுணர்களும், கல்வியாளர்களும் முடிவு செய்து விட்டார்களா?**

**அல்லது இணைய வழிக் கல்விக்குரிய அடிப்படை ஏற்பாடுகளை – வசதிகளை – ஒழுங்குகளை – செய்யாத நிலையில் அதை அணுகுவதன் மூலம் அதை வெற்றிகரமாகக் கொண்டு நடத்த முடியாமல் அரசு தோல்வி கண்டு விட்டமையை ஆசிரிய தொழிற்சங்கம் இப்படி வியாக்கியானப்படுத்துகின்றதா?**

**அல்லது இணையவழிக் கல்விக்கேற்ப – நவீன முறைமைக்கேற்ப – தம்மைத் தயார்படுத்த தகுதியற்ற ஆசிரியர்களை தனது உறுப்பினர்களாகக் கொண்டிருக்கும் ஆசிரியர் சங்கம் அந்த வக்கற்ற போக்கில் இப்படி உரைக்கின்றதா?**

**இணைய வழிக் கல்விக்குள் ஒரு சிறு அங்கமாக – பகுதியாக – அடங்கக் கூடிய தொலைக்காட்சிக் கல்வியை பரிந்துரைக்கும் மேற்படி தொழிற்சங்கம், இணையவழிக் கல்வி முறையே தோல்வியுற்ற ஒன்றாகச் சுட்டிக் காட்டுவது நவீன கல்விப் போதனை முறைமைக்கு கடந்த தலைமுறை ஆசிரியர்களை இசைவாக்கப்படுத்தும் முயற்சிக்கு இணங்க விரும்பாத பண்பியல்பாகவே தோன்றுகின்றது.**

**இணைய வழிக் கல்விக்கான அடிப்படைகளை – தேவைகளை – பூர்த்தி செய்யாமல் அதற்கு அரசாங்கம் கட்டாயப்படுத்துகின்றது என்றால் அது வேறு விடயம்.**

**சம்பந்தப்பட்ட ஆசிரியர் சங்கம் தன் நிலைப்பாட்டை தெளிவுபடுத்துவது நல்லது.**

# நாட்டை உடனடியாக முடக்குமாறு வலியுறுத்துகின்றார் சஞ்சய பெரேரா



கொரோனா வைரஸ் தொற்றின் தாக்கத்தைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கு நாட்டை உடனடியாக முடக்குவதே சிறந்த தீர்மானமென மருந்துகள் மற்றும் சுகாதார நிர்வாகம் தொடர்பான பேராசிரியர் வைத்திய நிபுணர் சஞ்சய பெரேரா தெரிவித்துள்ளார்.

மேலும் நாட்டில் தற்போது பதிவாகும் அன்றாட மரணம் மற்றும் தொற்றுத் தரவை நம்ப முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, எதிர்வரும் காலங்களில் இறப்புகளின் எண்ணிக்கை 20 ஆயிரத்தைக் கூட கடக்கும் வாய்ப்பு உள்ளதுடன் செப்ரெம்பர் மாதத்திற்குள் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 5 லட்சத்துக்கும் அதிகமாகலாம் என்றும் சஞ்சய பெரேரா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஆகவே இத்தகையதொரு சூழ்நிலையைத் தடுப்பதற்கு நாட்டை முழுமையாக முடக்கி கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கு உரிய செயற்பாட்டை முன்னெடுக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

# கொவிட் நிதியில் ஊசி கொள்வனவு எதிர்க்கட்சி பாராட்டுத் தெரிவிப்பு

இடுகம நிதியத்தில் உள்ள 136 கோடியை கொரோனாத் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வதற்குப் பயன்படுத்தும் அரசாங்கத்தின் திட்டத்துக்கு எதிர்க்கட்சி பாராட்டுத் தெரிவித்துள்ளது.

நேற்று (செவ்வாய்க்கிழமை) எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் பேசிய போதே நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் இதனைத் தெரிவித்தார்.

குறித்த நிதியத்தின் தற்போதுள்ள 1,360,922,969.24 இருப்பை தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது என ஜனாதிபதி ஊடகப் பிரிவுஅறிவித்திருந்தது.



இந்நிலையில் குறித்த நிதியத்தில் உள்ள பணத்தை ஒருவருடத்தின் பின்னர் அரசாங்கம் கொரோனாத் தடுப்பூசி கொள்வனவுக்காகச் செலவிடவுள்ளதாகவும் எஸ்.எம்.மரிக்கார் குறிப்பிட்டார்.

# கிராம சேவையாளர் பிரிவுகளை முடக்குவதில் பயனில்லையாம்

## அரச மருத்துவ சங்கம் தெரிவிப்பு

கொரோனாத் தொற்று அதிகரித்துள்ள நிலை யில் கடுமையான பயணக் கட்டுப்பாடுகளை விதிக்குமாறு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கமும் இலங்கை மருத்துவ சங்கமும் கோரிக்கை விடுத்துள்ளன.

வைரஸ் தொற்று இரு வாரங்களுக்குப் பின்னரே அறிகுறிகளைக் காட்டுவதாக இலங்கை மருத்துவ சங்கத்தின் தலைவர் வைத்திய நிபுணர் பத்மா குணரத்ன தெரிவித்துள்ளார்.

எனவே வரவிருக்கும் வாரங்களில் மிக மோசமான சூழ்நிலை தொடர்பாக ஜனாதிபதிக்கும் அமைச்சரவைக்கும் தெரியப்படுத்தியுள்ளோம் எனவும் அவர் கூறினார்.


தற்போது அடையாளம் காணப்பட்டுள்ள புதிய கொரோனா வேகமாகப் பரவி வருகிறது என்றும் இது நாட்டின் முதல் மற்றும் இரண்டாவது அலைகளின் போது கண்டறியப்பட்ட மாறுபாட்டைப் போன்றதல்ல என்றும் வைத்திய நிபுணர் பத்மா குணரத்ன சுட்டிக்காட்டினார்.

அத்தோடு பி.சி.ஆர். சோதனை முடிவுகளைப் பெறுவதில் ஏற்படும் தாமதம் தொடர்பாக நோயாளியில் இருந்து வேறு நபர்களுக்குப் பரவ வாய்ப்பாக அமையும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

புதிய மாறுபாடு ஏற்கனவே பல பகுதிகளுக்குப் பரவியுள்ளதால், கொரோனா வைரஸின் பரவலைக் கட்டுப்படுத்த கிராமசேவகர் பிரிவுகளை முடக்குவதில் எந்தப்பயனும் இல்லை என்றும் குறிப்பிட்டார்.

இதேவேளை ஒரு நாளைக்கு 25 இறப்பு என்ற அடிப்படையில் சென்றால் 10 நாள்களுக்கு 250 இறப்புகள் பதிவாகும் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் வைத்தியர் பிரசாத் கொலம்பகே தெரிவித்துள்ளார்.

# மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்துக்கு அரச பணியாளர் அடையாள அட்டை பயன்படுத்தலாம்



அத்தியாவசிய சேவைப் பணியாளர்கள் தமது அலுவலக அடையாள அட்டையை மாகாணங்களுக்கு இடையில் செல்ல அனுமதி அட்டையாகப் பயன்படுத்தலாம் என பொலிஸார் அறிவித்துள்ளனர்.

நேற்று செவ்வாய்க்கிழமை நள்ளிரவு முதல் மாகாணங்களுக்கு இடையில் பயணக் கட்டுப்பாடுகள் நடைமுறைக்கு வந்தமையால் மே 31 வரை வார இறுதியில் பயணங்களை மேற்கொள்ளவும், உறவினர்களைப் பார்வையிடவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் நேற்று (செவ்வாய்க்கிழமை) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் பேசியபோதே பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் றோஹண இவ்வாறு தெரிவித்துள்ளார்.

எனவே ஒவ்வொரு மாகாணத்தின் எல்லைகளிலும் பொலிஸ் அதிகாரிகள் மற்றும் விசேட அதிரடிப் படையினர் மற்றும் இராணுவத்தினர் கடமையில் ஈடுபடுத்தப்படுவார்கள் என்றும் அவர் கூறியுள்ளார்.

மேலும் தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறுபவர்கள் மீது குற்றவியல் சட்டத்தின் கீழ் வழக்குத் தொடரப்படும் என்றும் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்துள்ளார்.

தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளில் வசிக்கும் மக்கள் வெளியேற அனுமதி வழங்கப்படாத அதே நேரத்தில் வெளியாள்கள் அந்த பகுதிக்குள் நுழைய அனுமதிக்கப்போவதில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

இருப்பினும், சுகாதாரம், பாதுகாப்பு, நீர், தகவல் தொடர்பு, மின்சாரம், ஊடகம் மற்றும் தொடர்புடைய சேவைகள், நீதித்துறை சேவைகள் உள்ளிட்ட அத்தியாவசிய சேவைகள் ஒவ்வொரு மாகாணத்திலும் உள்ள மக்களின் அன்றாட வாழ்க்கையைப் பாதிக்காமல் தொடர்ந்து செயற்படும்.

# இந்தியாவில் கொரோனா பாதிப்பு குறைகிறது மரண எண்ணிக்கை தொடர்ந்து அதிகரிப்பு



இந்தியாவில்தினசரிகொரோனாபாதிப்புதொடர்ந்து இரண்டாவது நாளாக குறைவடைந்து வருகின்றது என தரவுகள் வெளியாகியுள்ளன. ஆனாலும், இறப்பு எண்ணிக்கை சற்று உயர்ந்துள்ளதும் தரவுகளில் தெரியவந்திருக்கிறது.

இந்தியாவில் கொரோனாவின் இரண்டாவது அலை மே மாத நடுப்பகுதியிலிருந்து படிப்படியாகச் சரியத் தொடங்கும் என ஆய்வாளர்கள் எதிர்வு கூறியிருந்தனர். அதன்படி, பல மாநிலங்களில் ஊரடங்கு போடப்பட்டதைத் தொடர்ந்து தினசரி பாதிப்பு 4 லட்சத்தில் இருந்து சரியத் தொடங்கியுள்ளது. நேற்று முன்தினம் தினசரி பாதிப்பு 3.66 லட்சமாக இருந்த நிலையில் நேற்று 3.29 லட்சமாக அது குறைந்துள்ளது.

குறித்த 24 மணி நேரத்தில் ஏற்பட்ட பாதிப்பு மற்றும் இறப்புகள் குறித்து இந்திய மத்திய சுகாதார அமைச்சகம் நேற்றுக் காலை 8 மணிக்கு வெளியிட்ட புள்ளிவிவரத்தில், ஒரே நாளில் 3 லட்சத்து 29 ஆயிரத்து 942 பேர் புதிதாக வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளன எனக் கூறப்பட்டுள்ளது. இதன் மூலம் மொத்தப் பாதிப்பு 2 கோடியே 29 இலட்சத்து 92 ஆயிரத்து 517 ஆக அதிகரித்துள்ளது. மகாராஷ்டிரா, டெல்லி உள்ளிட்ட பல மாநிலங்களில் தினசரி பாதிப்பு சரிவை நோக்கி செல்வதாகவும் சுகாதார அமைச்சகம் கூறியுள்ளது.

நேற்று ஒரே நாளில் 3,876 பேர் பலியாகியுள்ளனை எனவும் நேற்று முன்தினம் இறப்பு எண்ணிக்கை 3,754 ஆக இருந்ததையும் தரவுகள் காட்டுகின்றன. மொத்த இறப்பு இரண்டு லட்சத்து 49 ஆயிரத்து 992 ஆக அதிகரித்துள்ளது. சிகிச்சை பெறுவோர் எண்ணிக்கை 37 லட்சத்து 15 ஆயி ரத்து 221 ஆக உள்ளது.

இதுவரை தினசரி பாதிப்பிலும் இறப்பு எண்ணிக்கையிலும் மகாராஷ்டிரா தொடர்ந்து முதலிடத்தில் இருந்த நிலையில், கர்நாடகா இப்போது முன்னிலை பெற்றுள்ளது. கர்நாடகாவில் நேற்று ஒரே நாளில் 596 பேரும் மகாராஷ்டிராவில் 549 பேரும் இறந்துள்ளனர். கர்நாடகாவில் நிலைமை தொடர்ந்து மோசமான நிலையில் இருக்கின்றது எனச் செய்திகள் தெரிவிக்கின்றன.

# நகைச்சுவை நடிகர் நெல்லை சிவா மரணம்



பிரபல நகைச்சுவை நடிகர் நெல்லை சிவா நெல்லை மாவட்டம் பணகுடியில் வசித்து வந்த நிலையில் நேற்று மாலை திடீரென மாரடைப்பு ஏற்பட்டு வீட்டிலேயே இறந்தார் என செய்திகள் தெரிவிக்கின்றன. அவருக்கு வயது 69.

நடிகர் நெல்லை சிவா 1985 இல் ஆண்பாவம் படத்தில் அறிமுகமானார். சீவலப்பேரி பாண்டி, ராவணன், மகாபிரபு, வெற்றிக் கொடி கட்டு, ரன், அன்பே சிவம், சாமி, வின்னர், திருமலை, திருப்பாச்சி, அன்பே ஆருயிரே, கிரீடம், தோரணை, கந்தசாமி, சகுனி, பட்டத்து யானை, எலி, மிருதன் உட்பட 500 இற்கும் மேற்பட்ட படங்களிலும் பல தொலைக்காட்சித் தொடர்களிலும் நடித்துள்ளார்.

நெல்லை சிவா இறுதியாக திரிஷாவின் பரமபதம் விளையாட்டு படத்தில் நடித்திருந்தார். விஜய் தொலைக்காட்சியின் பாண்டியன் ஸ்டோர்ஸ் தொடரிலும் நடித்துவந்தார்.

அவர் நெல்லை தமிழில் பேசி நடித்தது ரசிகர்களை மிகவும் கவர்ந்தது. வடிவேலுவுடன் இணைந்து அதிகப் படங்களில் நடித்துள்ளார். இருவரும் நடித்த ‘கிணத்த காணோம்...’ நகைச்சுவைக் காட்சி பெரிய வரவேற்பை பெற்றது.



# தெலங்கானா, நாகலாந்து மாநிலங்களிலும் ஊரடங்கு!

தெலங்கானாவில் கொரோனாவால் பாதிப்படைந்தோர் எண்ணிக்கை 5 லட்சத்தைக் கடந்துள்ள நிலையில், இன்று முதல் 10 நாள்களுக்கு முழு ஊரடங்கை அம்மாநில அரசு பிறப்பித்துள்ளது.

முழு ஊரடங்கு நடைமுறைக்கு வந்தாலும் காலை 6 மணி முதல் 10 மணி வரை அத்தியாவசியத் தேவை நடவடிக்கைகளுக்கு கட்டுப்பாட்டுத் தளர்வுகள் வழங்கப்பட்டுள்ளன. இதே போல நாகலாந்தில் வரும் 14 ஆம் திகதி முதல் ஒரு வாரத்திற்கு முழு ஊரடங்கு பிறப்பிக்கப்படவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

# கொரோனா குறித்து காங்கிரஸ் பொய்யான பிரசாரம்; சோனியாவுக்கு பா.ஜ.க. முக்கியஸ்தர் கண்டனக் கடிதம்

கொரோனா நோய் தொற்றுக் குறித்து பொய்யான பீதியை காங்கிரஸ் கட்சி பரப்புகிறது என பா.ஜ.கவின் முக்கிய தலைவர்களில் ஒருவரான ஜே.பி. நட்டா குற்றஞ்சாட்டியிருக்கிறார்.

காங்கிரஸ் செயற்குழுக் கூட்டம் இடைக்காலக் கட்சித் தலைவர் சோனியா காந்தி தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் பேசிய சோனியா காந்தி, “கொரோனாவைக் கட்டுப்படுத்துவதில் மத்திய அரசு தோல்வி அடைந்து விட்டது. அறிவியல் பூர்வமான எச்சரிக்கைகளை மத்திய அரசு வேண்டுமென்றே நிராகரித்ததால் நாடு பெரும் விலையைக் கொடுத்துக் கொண்டிருக்கிறது” என்று குறிப்பிட்டிருந்தார்.

இந்த நிலையில் பா.ஜ.கவின் முக்கிய தலைவர்களில் ஒருவரான ஜே.பி. நட்டா, காங்கிரஸ் தலைவர் சோனியா காந்திக்கு நான்கு பக்கக் கடிதம் ஒன்றை எழுதியிருக்கிறார். அந்தக் கடிதத்தில் அவர், ‘ காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த முதல்வர்கள் உட்பட காங்கிரஸ் தலைவர்கள் அனைவருமே கொரோனாத் தடுப்பூசி குறித்த தயக்கத்தை உருவாக்குவதற்கு முயற்சிக்கின்றனர். பிரதமர் மோடியின் தலைமையின் கீழ் தொற்றுநோய்க்கு எதிரான போராட்டம் அறிவியலின் மீதான அசைக்க முடியாத நம்பிக்கை, புது கண்டுபிடிப்புகளுக்கு ஆதரவு, கொரோனா போர் வீரர்கள் மீதான நம்பிக்கை ஆகியவற்றினால் இயக்கப்பட்டு வருகின்றன.



இந்த சவாலான நேரத்தில் காங்கிரஸ் கட்சியின் நடத்தை குறித்து வருத்தப்படுகிறேன். ஆனால், ஆச்சரியப்படவில்லை. ஏப்ரலில் கொரோனாப் பாதிப்பு அதிகரித்த போதும் கூட காங்கிரஸ் மிகப்பெரிய தேர்தல் பேரணிகளை நடத்தியது. ஊரடங்கு நடவடிக்கைக்கு ஆதரவாக காங்கிரஸ் செயற்படவில்லை. ஆனால், இப்போதோ ஊரடங்கு தேவை என வலியுறுத்துகிறது. கொரோனாவின் இரண்டாவது அலை குறித்த மத்திய அரசின் ஆலோசனைகளை காங்கிரஸ் புறக்கணிக்கிறது. கொரோனாவுக்கு எதிரான போராட்டத்தில் காங்கிரஸ் மக்களைத் தவறாக வழி நடத்துகிறது. பொய்யான பீதியை உருவாக்குகிறது. ராகுல் காந்தி உட்பட காங்கிரஸ் தலைவர்கள் அனைவரின் நடத்தைகளும் ஏமாற்று மற்றும் அற்பத் தன்மைகளுக்காக அனைவரது நினைவிலும் இருக்கும்’ என்று காரசாரமாக அவ் கடிதத்தில் எழுதியிருக்கிறார்.

# ஊர்வலத்தில் 5,000 பேர் கொரோனா விதிகள் மீறல்



கொரோனா விதிமுறை மீறி மதகுரு ஒருவரின் இறுதி ஊர்வலத்தில் ஆயிரக் கணக்கானோர் குவிந்த சம்பவம் உத்தரப்பிரதேசத்தில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கொரோனாவின் இரண்டாவது அலை தீவிரமாக இருப்பதால் இறுதி ஊர்வலங்களில் இருபதுக்கும் மேற்பட்டோர் பங்கேற்கக் கூடாது என கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. சில இடங்களில் இந்தத் தடை மீறப்படுவதால் கொரோனாத் தொற்று அதிகரித்து வருகின்றது எனக் குற்றச்சாட்டுகளும் எழுந்துள்ளன.

இந்தநிலையில், உத்தரப்பிரதேச மாநிலம் பதான் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலமான தலைமை காஜி அப்துல் ஹமித்முகமதுசலிமுல் காத்ரியின் இறுதி ஊர்வலத்தில் ஐந்தாயிரத்துக்கும் மேற்பட்டோர் பங்கேற்றுள்ளனர். சிறிய இடத்துக்குள் ஆயிரக்கணக்கான மக்கள் கூடியதால் சமூக இடைவெளி கடைப்பிடிக்கப்படவில்லை. பலரும் முகக்கவசமும் அணியாமல் இருந்துள்ளனர். இது தொடர்பான காணொலிகள் வெளிவந்து பல தரப்பினரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளன.

இது குறித்து காவல்துறையினர் கூறுகையில், “இது திட்டமிடப்பட்ட நிகழ்ச்சி அல்ல. மக்கள் அனைவரும் அவர்களாகவே வந்து கூடிவிட்டனர். இதனால், கூட்டத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை. கொரோனா வழிகாட்டுதல்களைப் பின்பற்றுமாறு ஒலி பெருக்கிகளில் தொடர்ந்து வலியுறுத்தினோம். மேலும், இந்தச் சம்பவம் தொடர்பாக அடையாளம் காணப்பட்ட நபர்கள் மீது வழக்குப் பதிவும் செய்யப்பட்டுள்ளது” என்று தெரிவித்துள்ளனர்.

# கேரளாவின் முதலாவது கம்யூனிஸ்ட் அமைச்சர் ‘இரும்புப் பெண்’ கௌரி அம்மா காலமானார்

கேரளாவின் மூத்த கம்யூனிஸ்ட் தலைவர்களில் ஒருவரான கௌரி அம்மா 102 வயதில் நேற்று அதிகாலை காலமானார்.

இந்தியாவில் முதன்முறையாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட கம்யூனிஸ்ட் அரசு கேரளாவில் 1957 இல் அமைந்தது. அப்போது இ.எம்.எஸ். நம்பூதிரிபாடு முதல்வராக தெரிவானார். அவரது அமைச்சரவையில் கௌரி அம்மா வருவாய்த் துறை அமைச்சராகப் பொறுப்பேற்றார். ‘கேரளாவின் இரும்புப் பெண்’ எனப் புகழப்படும் அவர் 6 முறை கம்யூனிஸ்ட் அமைச்சரவையிலும், காங்கிரஸ் கூட்டணி அமைச்சரவையிலும் அமைச்சராக இருந்துள்ளார். 13 முறை எம்.எல்.ஏயாக தெரிவாகியுள்ளார்.



2011 ஆம் ஆண்டுத் தேர்தலில் தோல்வியடைந்த பின்னர் அவர் தேர்தலில் போட்டியிடவில்லை. கடந்த சில வாரங்களுக்கு முன்பு உடல் நலக் குறைவு ஏற்பட்டதைத் தொடர்ந்து திருவனந்தபுரத்தில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அவர் நேற்று அதிகாலை சிகிச்சை பலனளிக்காமல் காலமானார். அவரது உடலுக்கு கேரள முதல்வர் பிரனாய் விஜயன் உட்பட பலரும் அஞ்சலி செலுத்தினர். பின்னர் சொந்த ஊரான ஆலப்புழாவுக்கு அவரது உடல் கொண்டு செல்லப்பட்டு அரசு மரியாதையுடன் தகனம் செய்யப்பட்டது.

# மாட்டுச்சாண சிகிச்சையால் ஆபத்து ஏற்படலாம்!

குஜராத்தின் அகமதாபாத்தில் நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிப்பதற்காக மாட்டு சாணத் தெரபி சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது. இது கொரோனாவுக்கு எதிராக பாதுகாப்பு தருகின்றது எனவும் கூறப்படுகிறது. இதில் உடல் முழுவதும் மாட்டுச் சாணமும் கோமியமும் தேய்த்து அதன் பின்னர் பால் மூலமாக அவை கழுவப்படுகின்றன. சில மருத்துவர்கள் கூட இந்த சிகிச்சையை எடுத்துக் கொள்ள வருகின்றனர் என தகவல்கள் வெளியாகியிருந்தன.

இந்த நிலையில் மாட்டு சாண சிகிச்சை கொரோனாவுக்கு எதிராக பாதுகாப்பு வழங்காது என மருத்துவர்கள் எச்சரித்துள்ளனர். இந்திய மருத்துவ சங்கத்தின் பெண்கள் பிரிவுத் தலைவர் தேசாய் கூறுகையில், “மாட்டுச் சாணம் என்பது கழிவு. மாட்டுச்சாணத்தையும் கோமியத்தையும் உடலில் பூசுவதால் நோய் எதிர்ப்புச் சக்தியை அவை அதிகரிக்காது. கொரோனா வைரஸில் இருந்து பாதுகாக்காது. ஆனால், மியூகோர்மைகோசிஸ் போன்ற இதர பாதிப்புக்களை ஏற்படுத்தலாம் என எச்சரித்துள்ளார்.

# இஸ்ரேலின் முக்கிய நகரில் அவசரநிலைப் பிரகடனம்

## பிரதமர் நேதன்யாகு அறிவிப்பு



இஸ்ரேலுக்கும், பலஸ்தீனியர்களுக்கும் இடையே கடந்த சில நாட்களாக கடுமையான மோதல் நிலவி வருகிறது. இஸ்ரேலின் ஜெருசலேமில் உள்ள அல் அக்ஷா வழிபாட்டு தளத்தில் பலஸ்தீனர்களுக்கும் இஸ்ரேலிய பாதுகாப்பு படையினருக்கும் இடையே கடந்த திங்கட்கிழமை மோதல் ஏற்பட்டது. இதனை தொடர்ந்து பலஸ்தீனர்கள் மீதான தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் காசா முனையை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துள்ள ஹமாஸ் அமைப்பு இஸ்ரேல் மீது நேற்று முன்தினம் தாக்குதல் நடத்தியது.

இதற்கு இஸ்ரேல் நடத்திய பதிலடி தாக்குதலில் ஹமாஸ் அமைப்பினர் உள்பட 30 பேர் உயிரிழந்தனர். இதனைத் தொடர்ந்து நேற்று முழுவதும் இருதரப்பும் மாறி மாறி தாக்குதலில் ஈடுபட்டு வந்தனர்.

அந்த வகையில் காசா முனைப் பகுதியில் இருந்த 13 மாடி கட்டடம் இஸ்ரேலிய படையினரால் தரை மட்டமாக்கப்பட்டது. காசா டவர் என்று அழைக்கப்படும் அந்த கட்டடம் ஹமாஸ் அமைப்பின் அரசியல் தலைமைக்கான அலுவலகமாக செயல்பட்டு வந்ததாக தகவல் வெளியாகியுள்ளது.

தாக்குதல் நடைபெறுவதற்கு முன்னதாக அந்த கட்டடத்தில் இருந்த பொதுமக்கள் அனைவரும் அங்கிருந்து வெளியேற்றப்பட்டனர். இதனால் உயிர் சேதம் தவிர்க்கப்பட்டது.

காசா டவர் கட்டடம் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் விதமாக இஸ்ரேலிய நகரங்களை குறிவைத்து ஹமாஸ் அமைப்பு 130 ரொக்கெட்டுகளை ஏவியது. இந்த ஏவுகணைகளில் பெரும்பாலானவை இஸ்ரேலிய ஏவுகணை தடுப்பு அமைப்பால் தடுக்கப்பட்டது. ஆனால், சில ஏவுகணைகள் இஸ்ரேலிய தலைநகர் டெல் அவிவ் மற்றும் பிற நகரங்களில் விழுந்தன. இதில் பஸ், வாகனங்கள், கட்டடங்கள் தீக்கிரையானது. ஹமாஸ் நடத்திய இந்த தாக்குதலில் கேரளாவைச் சேர்ந்த பெண் உட்பட 3 பேர் உயிரிழந்தனர்.

இதற்கிடையில், இஸ்ரேலின் லோட் நகரில் வன்முறை வெடித்துள்ளது. லோட் நகரில் இஸ்ரேலிய யூதர்களும், அரேபியர்களும் வசித்து வருகின்றனர்.

காசா மற்றும் ஜெருசலேம் பகுதியில் உள்ள பலஸ்தீனர்கள் மீது இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்து லோட் நகரில் வசித்து வரும் அரேபியர்கள் வன்முறையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இஸ்ரேலிய யூதர்களின் வீடுகள், கடைகள், வாகனங்கள் மீது லோட் நகரில் வசித்து வரும் அரேபியர்கள் தாக்குதல் நடத்தி வருகின்றனர். பல்வேறு வீடுகள், கார்கள் தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளன. இந்த தாக்குதலைத் தொடர்ந்து இஸ்ரேலிய யூதர்களுக்கும், அரேபியர்களுக்கும் இடையே மோதல் வெடித்துள்ளது. இந்த சம்பவங்களால் லோட் நகரில் பெரும் பரபரப்பான சூழ்நிலை நிலவி வருகிறது.

இந்நிலையில், வன்முறையைக் கட்டுப்படுத்தும் விதமாக லோட் நகரம் முழுவதும் அவசரநிலை பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. அவசரநிலை பிரகடனத்தை இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகு இன்று அறிவித்தார்.

அவசரநிலை பிரகடனப்படுத்தப்பட்டதன் மூலம் லோட் நகரில் இஸ்ரேலிய பாதுகாப்பு படையினர் குவிக்கப்பட உள்ளனர். பாதுகாப்பு படையினர் உள்ளூர் பொலிஸாருக்கு வன்முறையை கட்டுப்படுத்துவதிலும் அமைதியை நிலைநாட்டுவதிலும் உதவிகரமாக இருப்பார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அவசரநிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதால் லோட் நகர் முழுவதும் ஊரடங்கு அமுல்படுத்தப்பட உள்ளது.

# கொவிஷீல்டு தடுப்பூசி உயிரிழக்கும் அபாயத்தை 80 சதவீதம் குறைக்கும்

## இங்கிலாந்து சுகாதாரத் துறை



இந்தியாவில் கொரோனா வைரஸ் அதிகரித்து வருவதால் தடுப்பூசியின் தேவை அதிகரித்து வருகிறது. நாடு முழுவதும் சீரம் இன்ஸ்டிடியூட் ஆப் இந்தியாவின் கொவிஷீல்டு தடுப்பூசியும், பாரத் பயோடெக் நிறுவனத்தின் கொவெக்சின் தடுப்பூசியும் மக்கள் பயன்பாட்டில் உள்ளது.

இந்நிலையில் ஒரு டோஸ் கொவிஷீல்டு தடுப்பூசி, கொரோனாவால் உயிரிழக்கும் அபாயத்தை 80 சதவீதம் குறைக்கும் என்று இங்கிலாந்து பொதுச் சுகாதாரத்துறை மையம் நடத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது. தடுப்பூசி போட்டுக்கொண்ட பின் தொற்று ஏற்பட்டு 28 நாள்களுக்குள் உயிரிழந்தவர்கள் குறித்த தகவல்களை திரட்டிய ஆய்வாளர்கள், தடுப்பூசியின் தரம் குறித்து ஆய்வு மேற்கொண்டனர். முடிவில் கொவிஷீல்டு தடுப்பூசியின் ஒரு டோஸானது இறப்புக்கான வாய்ப்பை 80 சதவீதம் குறைப்பது தெரியவந்துள்ளது.

ஒக்ஸ்போர்ட் ஆராய்ச்சியாளர்களும் அஸ்ட்ரா ஜெனெகா நிறுவனமும் இணைந்து கண்டுபிடித்துள்ள இந்தத் தடுப்பூசியைத்தான் சீரம் நிறுவனம் இந்தியாவில் கொவிஷீல்டு என்ற பெயரில் உற்பத்தி செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

அதேபோல பைஸர் தடுப்பூசியின் ஒரு டோஸை எடுத்துக்கொண்டவர்கள் கொரோனாவால் உயிரிழக்கும் அபாயம் 80 சதவிகிதமும், இரண்டு டோஸை எடுத்துக் கொண்டவர்கள் கொரோனாவால் உயிரிழக்கும் அபாயம் 97 சதவிகிதமும் குறைகின்றது எனப் இங்கிலாந்து பொதுசுகாதாரத்துறைமையம் தெரிவித்துள்ளது.

# சனத்தொகை வளர்ச்சி விகிதம் சீனாவில் 0.04 சதவீதம் வீழ்ச்சி




சீனாவில் மக்கள் தொகை வளர்ச்சி விகிதம் 0.04 சதவீதம் சரிந்திருக்கின்றது என அந்நாடு நடத்திய தேசிய மக்கள் தொகை கணக்கெடுப்பின் முடிவில் தெரிய வந்துள்ளது.

2000 முதல் 2010ஆம் ஆண்டு வரை சீனாவின் மக்கள் தொகை வளர்ச்சி விகிதம் 0.57 சதவீதமாக இருந்தது. இந்த அளவு 2010 முதல் 2020 வரையிலான 10 ஆண்டுகளில் 0.53சதவீதமாக குறைந்துள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி 2010 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மொத்த மக்கள் தொகையில் உள்ள குழந்தைகளின் எண்ணிக்கையும், 60 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதினரின் எண்ணிக்கையும் உயர்ந்துள்ளது.

ஆனால் 15 முதல் 59 வயதிற்குட்பட்டவர்களின் எண்ணிக்கை கணிசமாக சரிந்திருப்பது கணக்கெடுப்பில் தெரியவந்துள்ளது.

# ஆப்கானிஸ்தான் பள்ளி அருகே குண்டு தாக்குதலில் பலியான மாணவிகள் எண்ணிக்கை 58 ஆக உயர்வு

*ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில், பள்ளி அருகே நடத்தப்பட்ட வெடிகுண்டுத் தாக்குதலில் உயிரிழந்த மாணவிகளின் எண்ணிக்கை 58 ஆக அதிகரித்துள்ளது.*

*மேலும் 150 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்த நிலையில், மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். கடந்த சனிக்கிழமை மாலை, சையது உல் சுகாதா (Sayed ul Shuhada) என்ற பள்ளியை விட்டு ஏராளமான மாணவர்கள் வெளியேறிக்கொண்டிருந்தனர்.*



*அப்போது பள்ளியின் முன்பு நிறுத்தப்பட்டிருந்த கார் ஒன்றில் வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்தது. இதில் உயிரிழந்த மாணவிகள் பலரும் 15 வயதுக்குட்பட்டவர்கள் எனக் கூறப்படுகிறது.*

*இந்தக் கொடூரத் தாக்குதலுக்கு தலிபான் தீவிரவாதிகளே காரணம் என ஆப்கானிஸ்தான் அதிபர் அஷ்ரப் கனி குற்றஞ்சாட்டியுள்ளார். ஆனால் இதற்கு தலிபான் தீவிரவாத அமைப்பு மறுப்புத் தெரிவித்துள்ளது.*

# சீனாவின் துணையின்றி 5ஜி சோதனை செய்ய இந்தியா முடிவு

*சீன நிறுவனங்களின் பங்களிப்பு இன்றி 5ஜி தொலைத்தொடர்பு சோதனை நடத்துவது இந்தியாவின் இறையாண்மை மிக்க முடிவு என அமெரிக்கா தெரிவித்துள்ளது.*

*இந்தியாவில் 5ஜி சேவைக்கான சோதனையைச் சீன நிறுவனங்களின் தொழில்நுட்ப ஒத்துழைப்பு இன்றி நடத்த ஜியோ, ஏர்டெல், வோடபோன் ஐடியா, எம்.டி.என்.எல். ஆகிய நிறுவனங்களுக்குத் தொலைத்தொடர்புத் துறை ஒப்புதல் அளித்துள்ளது.*

*இதை வரவேற்றுள்ள அமெரிக்க வெளியுறவு அமைச்சகச் செய்தித் தொடர்பாளர் நெட் பிரைஸ், இந்தியாவின் செயல் இறையாண்மை மிக்க நடவடிக்கை எனத் தெரிவித்துள்ளார்.*

*சீனாவின் ஹுவேய், இசட் டி நிறுவனங்களின் வலையமைப்பு, தொழில்நுட்பம் ஆகியவற்றைப் பயன்படுத்துவது தேசியப் பாதுகாப்புக்கும், தொலைத்தொடர்பு உட்கட்டமைப்புக்கும், வாடிக்கையாளர்களின் தனியுரிமைக்கும், மனித உரிமைக்கும் அச்சுறுத்தல் என அவர் தெரிவித்தார்.*



## மட்டக்களப்பு மாவட்டத்தில்

# வீடுகளில் ஏற்படும் வன்முறைகளில் இருந்து பாதுகாக்கும் வகையிலும் விசேட நடவடிக்கை

மட்டக்களப்பு மாவட்டத்தில் கொரோனாவின் தாக்கம் அதிகரித்துள்ள நிலையில், அதிலிருந்து மக்களைப் பாதுகாக்கவும் இக்காலத்தில் வீடுகளில் ஏற்படும் வன்முறைகளில் இருந்து பாதுகாக்கும் வகையிலும் விசேட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

மட்டக்களப்பு மாவட்ட தேவை நாடும் மகளிர் அமைப்பும் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயமும் இணைந்து, மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள 12 பொலிஸ் பிரிவுகளிலும் இந்த விழிப்புணர்வு நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றன.

தேவை நாடும் மகளிர் அமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் திருமதி பாலசிங்கம் சங்கீதா, மட்டக்களப்பு தலைமையைப் பொலிஸ் நிலைய சிறுவர் மற்றும் மகளிர் பிரிவுக்கான பொறுப்பதிகாரி என்.சுசீலா மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களும் இதில் கலந்துகொண்டனர்.

வைரஸ் தாக்கத்திலிருந்து மக்களைப் பாதுகாப்பும் வகையிலான விழிப்புணர்வுகள் வழங்கப்பட்டதுடன், குடும்ப வன்முறைகள் குறித்தான விழிப்புணர்வுகளும் அது தொடர்பில் தொடர்புகொள்ளவேண்டிய அவசர தொலைபேசி இலக்கங்களும் அறிவுறுத்தல்களில் வழங்கப்பட்டன.

இதன்போது வீட்டில் உள்ள பாடசாலை மாணவர்கள் தொடர்பில் பெற்றோர் கவனம் செலுத்துவது மற்றும் கற்பித்தல் செயற்பாடுகளை முன்னெடுத்தல் தொடர்பிலும் விழிப்புணர்வுகள் வழங்கப்பட்டன.

## 24 மணித்தியாலத்தில் 28 பேருக்குத் தொற்று

மட்டக்களப்பு, மே 12

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த 24 மணித்தியாலயத்தில் 28 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதியனதையடுத்து, தொற்றாளர்களின் எண்ணிக்கை 1,313 ஆதிகரித்துள்ளது என பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் நா.மயூரன், இன்று தெரிவித்தார்.

அன்டிஜன் மற்றும் பி.சி.ஆர். பரிசோதனையில் ஆரையம்பதி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 8 பேருக்கும், மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 7 பேருக்கும், ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 7 பேருக்கும், வாழைச்சேனை, பட்டிப்பளை, செங்கலடி ஆகிய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் தலா ஒருவர் உட்பட 3 பேருக்கும். களுவாஞ்சிக்குடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 3 பேர் உட்பட 28 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இவர்களில், கொரோனாத் தொற்றினால் நேற்று உயிரிழந்த இருவரின் நேரடி தொடர்புடைய உறவினர்களான ஆரையம்பதியில் 7 பேருக்கும், அவ்வாறே மட்டக்களப்பு, மாங்கத்தில் 7 பேருக்கு தொற்றுதி கண்டறியப்பட்டுள்ளது.

இதேவேளை, மாவட்டத்தில் 3ஆவது கொரோனா அலையில் தொற்றாளர்களின் எண்ணிக்கை 330 ஆக அதிகரித்துள்ளதுடன், 7 உயிரிழப்புக்கள் இடம்பெற்றுள்ளன எனவும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.



## கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதாவுக்கு கொரோனா

கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யஹம்பத் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியுள்ளார்.

பி.சி.ஆர். பரிசோதனை செய்தபோது, தனக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதியாகியுள்ளது என கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யஹம்பத் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து தன்னை சுயதனிமையில் ஈடுபடுத்திகொண்ட அவர், கடந்த சில நாள்களாக தன்னுடன் மிகநெருக்கமாக பழகியவர்கள், தங்களை தாங்கள் சுயதனிமைப்படுத்தி கொள்ளுமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

## கோறளைப்பற்றில் குரங்குகள் அட்டகாசம்

கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் பிரிவில் குரங்குகளின் அட்டகாசம் அதிகரித்துள்ள நிலையில் வாழைச்சேனை ஹைறாத் வீதியில் வீடு ஒன்றினை சேதப்படுத்திய சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வாழைச்சேனை பிரதேசத்தில் சில மாதங்களாக குரங்குகளில் நடமாட்டம் அதிகரித்து, பயன்தரும் மரங்கள் மற்றும் வீட்டு கூரைகள் என்பவற்றை சேதப்படுத்தி வருகின்றன.

இவை தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் நிலையில் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருவதுடன், சொத்துக்களும் சேதமாக்கப்பட்டு வருகிறது, இதனால் சிலருக்கு காயங்களும் ஏற்பட்டு வருகின்றது எனவும் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

வீட்டின்கூரையை உடைத்து வீட்டினுள் காணப்படும் பொருள்களை சேதப்படுத்துவடன், வீட்டில் இருந்தவர்களை தாக்குவதாகவும்மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே வாழைச்சேனை பிரதேசத்தில் தொடர்ச்சியாக குரங்குகளின் வருகை இடம்பெற்று வருவதால் மக்களின் பாதுகாப்பு கருதியும், குரங்குகளின் உயிரைப் பாதுகாக்கும் வகையிலும் உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும் என கோரிக்கை முன்வைக்கப்படுகிறது.

## திருகோணமலை பகுதியில் பரவும் B.1.1.7 வகை கொரோனா வைரஸ்



பிரித்தானியாவில் பரவிவரும் B.1.1.7 வகை கொரோனா வைரஸ் திருகோணமலையிலும் கண்டறியப்பட்டுள்ளது என மாவட்ட பிராந்திய பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் வீ.பிரேமானந் தெரிவித்தார்.

திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணியகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

கொழும்பு ஸ்ரீ ஜயவர்தனபுர ஆய்வு கூடத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட கடந்த மூன்று நாள்களுக்கு முன்னர் கந்தளாய், சீனக்குடா, உப்புவெளி பிரதேசங்களில் மேற்கொண்ட பி.சி.ஆர். பரிசோதனைகளில்இந்தவைரஸ்கண்டறியப்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார்.

இதேவேளை திருகோணமலையில் கடந்த 24 மணித்தியாலத்திற்குள் 42 கொரோனாத் தொற்றாளர்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ள நிலையில் 1,961 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது எனவும், 20 மரணங்கள் இதுவரை பதிவு செய்யப்பட்டுள்ளன எனவும்அவர் குறிப்பிட்டார்.

மேலும் மாவட்டத்தில் மூன்று வைத்தியசாலைகளிலும் 240 கட்டில்கள் தயார் நிலையில் உள்ளன எனவும் மேலும் நோயாளர்கள் அதிகரிக்கும் பட்சத்தில் வைத்திய தேவைகளுக்காக மேலும் மூன்று வைத்தியசாலைகளை தெரிவு செய்து வைத்துள்ளோம்எனவும்திருகோணமலை பிராந்திய சுகாதார பிரதி பணிப்பாளர் வீ.பிரேமானந் குறிப்பிட்டார்.

## மட்டக்களப்பில் கொரோனாத் தொற்றினால் மேலும் இருவர் நேற்று உயிரிழந்துள்ளனர்

மட்டக்களப்பு, மே 12

மட்டக்களப்பில் கொரோனா வைரஸ் தொற்றினால் மேலும் இருவர் உயிரிழந்துள்ளனர். இதற்கமைய உயிரிழப்புக்களின் எண்ணிக்கை 16 ஆக அதிகரித்துள்ளது என மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரான வைத்தியர் நா. மயூரன் தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்றுக்கு போதனா வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்றுவந்த இருவரே, நேற்று செவ்வாய்க்கிழமை உயிரிழந்துள்ளனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மட்டு.சுகாதார வைத்திய அதிகாரிப் பிரிவிலுள்ள 74 வயதுடைய ஒருவரும் ஆரையம்பதி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள 61 வயதுடைய ஒருவரும் இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை மட்டக்களப்பில் இது வரை 1,285 பேர், கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பிக்கப் ரக வாகனத்தில் கஞ்சா கடத்திய சாரதி

மட்டக்களப்பில் வீதி அபிவிருத்தி பணியில் ஈடுபட்டுவரும் ஒப்பந்தகாரர் கம்பனி ஒன்றிற்குச் சொந்தமான வீதி அதிகாரசபை என்று பெயரிடப்பட்ட பிக்கப் ரக வாகனத்தில் கஞ்சா கடத்திய சாரதி உட்பட கஞ்சா வியாபாரத்தில் ஈடுபட் 4 பேரை நேற்று மாலை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அவர்களிடமிருந்து கேரளா கஞ்சா மற்றும் பிக்கப் ரக வாகனம், மோட்டார் சைக்கிள் ஒன்றையும் மீட்டுள்ளோம் என மாவட்ட குற்ற விசாரணைப் பதிவு பொறுப்பதிகாரி பி.கே.பண்டார தெரிவித்தார்.

நேற்று மாலை திருப்பெருந்துறை பகுதியில் சுற்றிவளைத்து சோதனையிட்டபோது 155 கிராம் கேரள கஞ்சாவுடன் குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கல்லடி மணிக்கூட்டு கோபுரத்திற்கு அருகில் கஞ்சா வியாபாரத்தில் ஈடுபட்ட ஒருவரை கைது செய்ததுடன் அவரிடத்தில் இருந்து 3,100 மில்லிக் கிராம் கேரளா கஞ்சாவை மீட்டதுடன் கல்லடி திருச்செந்தூர் பகுதியில் கஞ்சா வியாபாரத்தில் ஈடுபட்ட ஒருவரை கைது செய்ததுடன் அவரிடமிருந்து 73 கிராம் கஞ்சாவை மீட்டனர்.

அதேவேளை மட்டக்களப்பு திருகோணமலை வீதி வைச்சந்தியில் மோட்டார்சைக்கிள் ஒன்றில் கஞ்சாவைஎடுத்து வந்த ஊறணியைச் சேர்ந்த ஒருவரிடம் இருந்து 3,220 மில்லிக்கிராம் கேரளாக கஞ்சாவை மீட்டுள்ளனர்.

## காத்தான்குடியில் யாசகத்திற்கு தடை



காத்தான்குடியில் யாசகத்திற்காக வீடுகளுக்குச் செல்வது, வீதிகளில் அலைவது என்பன தடை செய்யப்பட்டுள்ளதுடன், நேற்று செவ்வாய்கிழமை முதல் மறு அறிவித்தல் வரை அத்தியாவசிய சேவைகள் தவிர்ந்த சகல வர்த்தக நிலையங்களும் மாலை 6 மணியுடன் மூடப்படுதல் வேண்டும் என காத்தான்குடி கொவிட் - 19 தடுப்பு செயலணி அறிவித்துள்ளது.

தற்போது நாட்டில் கொரோனா 3ஆம் அலை தீவிரமாக பரவிவருவது தொடர்பில் கடந்த சனிக்கிழமை காத்தான்குடி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் இடம் பெற்ற முக்கிய கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கமைய பின்வரும் விடயங்களை பொது மக்கள் கண்டிப்பாக கடைப்பிடிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

உடன் அமுலுக்கு வரும் வகையில் யாசகத்திற்காக வீடுகளுக்குச் செல்வது, வீதிகளில் அலைவது என்பன தடை செய்யப்பட்டுள்ளதுடன், சதகா, பித்ரா விடயத்தில் பொது மக்கள் தங்கள் வீடுகளுக்கு அருகில் உள்ள ஏழை எளியவர்கள், உறவினர்கள் தொடர்பில் முன்னுரிமை வழங்கவும்.

கடற்கரை, ஆற்றங்கரை, மைதானம் போன்ற பொது இடங்களில் பொது மக்கள் கூடுவது மறு அறிவித்தல் வரை முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது.

செவ்வாய்கிழமை முதல் மறு அறிவித்தல்வரை அத்தியாவசிய சேவைகள்தவிர்ந்த சகல வர்த்தக நிலையங்களும் மாலை 6 மணியுடனும், அத்தியாவசிய சேவைகள் இரவு 9 மணியுடனும் மூடப்படுதல் வேண்டும்.

பெருநாள் ஒன்று கூடல்கள், உறவினர் வீடுகளுக்குச் செல்லல் என்பன தடைசெய்யப்பட்டுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு





# இத்தாலி 'சீரி – ஏ' தொடரின் சம்பியனாகிறது இன்டர் மிலான் 3 போட்டிகள் மீதமுள்ள நிலையிலேயே வெற்றி உறுதியானது

தொடர்ந்து ஒன்பது முறை இத்தாலி கோப்பையை வென்ற நடப்பு சம்பியன் ஜுவென்டஸ் 5வது இடத்துக்கு தள்ளப்பட, இந்த முறை இன்டர் மிலான் சம்பியன் பட்டத்தை கைப்பற்றுகிறது.

இத்தாலியின் 123 ஆண்டுகள் பழைமையான கால்பந்து போட்டித் தொடரான 'சீரி – ஏ' இத்தாலி வெற்றிக் கிண்ணத்தை இன்டர் மிலான் கைப்பற்றுவது உறுதியாகியுள்ளது.

நடப்புத் தொடரில் பங்கேற்றுள்ள 20 அணிகளும் தலா 38 போட்டிகளில் விளையாட வேண்டிய நிலையில் நேற்று முன்தினம் வரை அவை தலா 35 போட்டிகளில் ஆடி முடித்துள்ளன. இன்னும் தலா 3 போட்டிகள் மீதமாக உள்ள நிலையிலேயே புள்ளிகளின் அடிப்படையில் இன்டர் மிலான் இந்த முறை சம்பியன் பட்டத்தை வெல்கிறது.

அந்த அணி 35 போட்டிகளில் விளையாடி 26 வெற்றி, 7 சமநிலை, 2 தோல்விகளுடன் 85 புள்ளிகளைக் குவித்துள்ளது. அதனால், வெற்றிக் கிண்ணம் இன்டர் மிலான் வசமாவது உறுதியாகி விட்டது.

புள்ளிப்பட்டியலில் இரண்டாவது இடத்தில் உள்ள அட்லான்டா, மூன்றாவது இடத்தில் உள்ள ஏ.சி.மிலான் ஆகிய அணிகள் தலா 35 போட்டிகளில் தலா 72 புள்ளிகளைப் பெற்றுள்ளன. இந்த இரு அணிகளும் எஞ்சிய 3 ஆட்டங்களிலும் வெற்றி பெற்றாலும் தலா 81 புள்ளிகள்தான் அவற்றுக்குக் கிடைக்கும். அதனால் இன்டர் மிலான் 19 ஆவது முறையாக வெற்றிக்கிண்ணத்தை வசப்படுத்தி விட்டது உறுதியாகிறது.

அதே நேரத்தில் நடப்பு சம்பியன் ஜுவென்டஸ் நிலைமை முதல் மூன்று இடங்களுக்குள் கூட வரமுடியாத நிலை ஏற்படும் வாய்ப்பு அதிகமாகியுள்ளது. உலகின் முன்னணி ஆட்டக்காரரான கிறிஸ்டியனோ ரொனால்டோ உட்பட நட்சத்திர வீரர்கள் பலர் இருந்தும் அவர்களால் கிண்ணத்தை கைப்பற்றிட இயலவில்லை.

ஜுவென்டஸ் இதுவரை 35 ஆட்டங்களில் விளையாடி 20 வெற்றி, 9 சமநிலை, 6 தோல்விகளுடன் 69 புள்ளிகளைப் பெற்று பட்டியலில் ஐந்தாவது இடத்தில் இருக்கிறது. எஞ்சிய போட்டிகளில் வென்றாலும், மற்ற அணிகளின் தோல்விகளைப் பொறுத்து அதிகபட்சமாக இரண்டாவது இடம் கிடைக்கும் வாய்ப்பு அந்த அணிக்கு உள்ளது. ஆனால், மற்றைய அணிகள் சிறப்பாக விளையாடும் பட்சத்தில் முதல் மூன்று இடங்களில்கூட அவர்களால் இடம்பெற முடியாமல் போகலாம்.

அந்த அணி இதுவரை 36 முறை சம்பியன் பட்டம் வென்றுள்ளது. அதிலும் 2011 – 12 ஆம் ஆண்டு முதல் 2019 – 20 வரை தொடர்ந்து 9 முறை சம்பியன் கிண்ணத்தை வென்றமை குறிப்பிடத்தக்கது.

இத்தாலி 'சீரி – ஏ' தொடரில் மட்டுமன்றி நடப்பு ஐரோப்பிய சம்பியன் லீக், யு.இ.எப்.சி. ஐரோப்பா லீக் ஆகியவற்றிலும் ஜுவென்டஸ் அரையிறுதி வாய்ப்புகளை இழந்துவிட்டது. நடப்புத் தொடரின் இறுதித் சுற்றுப் போட்டிகள் மே 23 ஆம் திகதி நடைபெறவுள்ளன. அன்று இன்டர் மிலான் அணிக்கு இத்தாலி 'சீரி – ஏ' வெற்றிக் கிண்ணம் வழங்கப்படும்.

வெற்றிக் கிண்ணத்தை இழந்தாலும் நடப்புத் தொடரில் அதிக கோல் அடித்த வீரர்களின் பட்டியலில் ஜுவென்டஸ் வீரர் கிறிஸ்டியனோ ரொனால்டோ முதலிடத்தில் இருக்கிறார். அவர் இதுவரை 27 கோல்களை அடித்துள்ளார். சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றவுள்ள இன்டர் மிலான் அணியின் வீரர் ரோமேலு லுகாகு 21 கோல்களுடன் நான்காவது இடத்தில் இருக்கிறார்.

# நன்கொடை திரட்ட சதுரங்கப் போட்டிகளில் விளையாடும் கிராண்ட் மாஸ்டர்கள்

இந்தியாவில் கொரோனாத் தொற்று பரவலுக்கான தீவிரம் அதிகமாக உள்ள நிலையில் கொரோனா நிவாரணப் பணிகளுக்கான நிதியைத் திரட்ட சதுரங்கப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

விஸ்வநாதன் ஆனந்த் மற்றும் கொனேரு ஹம்பி, துரோணவல்லி ஹரிகா, நிஹால் சரின், பிரக்ஞானந்தா என நான்கு கிராண்ட் மாஸ்டர்கள் ஒன்லைன் மூலம் இந்த சதுரங்கப் போட்டிகளில் விளையாடவுள்ளனர்.



இந்தியாவின் கொரோனா நிவாரணப் பணிகளுக்காக நிதி திரட்டவுள்ளோம். அதனால் இந்தியாவின் சிறந்த நான்கு கிராண்ட் மாஸ்டர்களுடன் நீங்கள் நன்கொடை செலுத்திவிட்டு விளையாடலாம். வரும் வியாழனன்று இந்தப் போட்டிகள் நடைபெறவுள்ளன. இந்திய சதுரங்க சமூகம் முன்னெடுத்துள்ள முயற்சி இது. நிச்சயம் நாங்கள் எண்ணியபடி நிதியைத் திரட்டுவோம் என்ற நம்பிக்கை உள்ளது என விஸ்வநாதன் ஆனந்த் தெரிவித்துள்ளார்.

சர்வதேச சதுரங்க தரவரிசையில் 2,000 புள்ளிகளுக்கு கீழ் உள்ள வீரர்கள் இந்தப் போட்டியில் பங்கேற்று விளையாடலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. விஸ்வநாதன் ஆனந்துடன் விளையாட 150 அமெரிக்க டொலர்களும் மற்றும் நால்வருடன் விளையாட விரும்புபவர்கள் 25 அமெரிக்க டொலர்களும் நன்கொடையாகச் செலுத்தி இந்த விளையாட்டில் பங்கேற்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# 'ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்பது சந்தேகம்தான்'

## செரீனா வில்லியம்ஸ் பேட்டி



'டோக்கியோவில் நடைபெற உள்ள ஒலிம்பிக் போட்டிகளில் நான் பங்கேற்பது சந்தேகம் தான்'என்று அமெரிக்க டென்னிஸ் வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் கூறியுள்ளார்.

அமெரிக்காவின் முன்னணி டென்னிஸ் வீராங்கனையான செரீனா வில்லியம்ஸ் கடந்த பெப்ரவரியில் நடந்த அவுஸ்ரேலிய ஓபின் கிராண்ட்ஸ்லாம் தொடரில் செரீனா வில்லியம்ஸ், அரையிறுதி வரை முன்னேறினார். அரையிறுதியில் அவர், ஜப்பான் வீராங்கனை நவோமி ஒசாகாவிடம் தோல்வியடைந்தார். அதன் பின்னர் இரண்டு மாத காலத்திற்கும் மேலாக சர்வதேச டென்னிஸ் போட்டிகளில் பங்கேற்காமல் இருந்த அவர், தற்போது ரோமில் நடந்து வரும் இத்தாலி ஓபின் டென்னிஸ் போட்டிகளில் விளையாடி வருகிறார்.

மகளிர் தரவரிசையில் தற்போது 8 ஆம் இடத்தில் உள்ள செரீனா இதுவரை கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒற்றையர் பிரிவில் 23 முறை பட்டம் வென்றுள்ளார். ஒலிம்பிக் போட்டிகளில் 4 முறை தங்கப்பதக்கங்களைப் பெற்றிருக்கிறார்.

ரோமில் அவர் ஊடகங்களுக்கு அளித்த பேட்டியில், 'ரோமில் ஆடுவது ஓர் அற்புதமான அனுபவம். வரும் 23 ஆம் திகதி பிரெஞ்ச் ஓபின் கிராண்ட்ஸ்லாம் போட்டிகள் தொடங்கவுள்ள நிலையில் ரோமில் நடந்து வரும் இப்போட்டித் தொடர் அனைத்து வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு சிறந்த பயிற்சிக் களமாக உள்ளது. வரும் ஜுலையில் டோக்கியோவில் நடைபெற உள்ள ஒலிம்பிக் போட்டிகளில் என்னால் பங்கேற்க முடியாது என்று நினைக்கிறேன்.

என்னுடைய மகள் ஒலிம்பியாவுக்கு தற்போது 3 வயது ஆகிறது. அவளை நான் 24 மணி நேரத்திற்கு மேலாகப் பிரிந்து இருந்ததில்லை. உலகம் முழுவதும் கொரோனா பரவி வரும் சூழ்நிலையில், எனது மகளை டோக்கியோவுக்கு அழைத்துச் செல்ல முடியாது. அதனால் இந்த ஒலிம்பிக் போட்டியில் நான் கலந்துகொள்வது சந்தேகம்தான். தவிர அடுத்தடுத்து வரும் கிராண்ட்ஸ்லாம் போட்டிகளுக்கும் தயாராக வேண்டும்" என்று தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## வெலிக்கடைச் சிறைச்சாலையில் சட்டவிரோத பொருள்கள் வீசல்

கொழும்பு, மே 12

வெலிக்கடை சிறைச்சாலையின் பெண்கள் பிரிவுக்குள் எறியப்பட்ட சட்டவிரோத பொருள்கள் அடங்கிய எட்டு பொதிகளை சிறை அதிகாரிகள் கண்டுபிடித்துள்ளனர்.

சிறைச்சாலை செய்தித் தொடர்பாளர் சந்தனா ஏக்கநாயக்க இதனைத் தெரிவித்துள்ளார்.

வனாத்தமுல்ல பகுதியில் இருந்து இந்தப் பொதிகள் எறியப்பட்டுள்ளன.

அதன்படி, 14 கையடக்க தொலைபேசி பற்றிகள், 700 மில்லிகிராம் ஹெரோயின் உட்பட்ட பொருள்களை அதிகாரிகள் கண்டுபிடித்தனர்.

இந்த பொருள்கள் மேலதிக விசாரணைகளுக்காக பொரளை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

# அத்தியாவசிய சேவைகளுக்கு எந்த அசௌகரியமும் ஏற்படாது

## அரசாங்கம் உறுதி

அத்தியாவசிய சேவைகளுக்கு எந்த அசௌகரியமும் ஏற்படாத வகையில் போக்குவரத்து கட்டுப்பாடுகள் அமுல்படுத்தப்படும் என அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

நேற்று(செவ்வாய்க்கிழமை) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும் அத்தியாவசிய சேவைகள், ஏற்றுமதிசார்ந்ததொழில்கள், வேளாண்மை மற்றும் மீன்வளத் தொழில் ஆகியவை பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தாலும் செயற்படும் என்றும் குறிப்பிட்டார்.

முழு நாட்டிற்கும் ஒரே நேரத்தில் கட்டுப்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்குப் பதிலாக, கொரோனா தொற்று எண்ணிக்கையைக் கருத்திற்கொண்டு கட்டுப்பாடுகள் மற்றும் அத்தியாவசிய சேவை தொடர்பாக அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் எனவும் கூறினார்.

பயணக் கட்டுப்பாடுகள் குறித்த முடிவு அமைச்சரவையால்எடுக்கப்பட்டதுஎன்றும் கொரோனாத் தடுப்புக்கான ஜனாதிபதி செயலணியால் அல்ல என்றும் அமைச்சர் உதய கம்மன்பில குறிப்பிட்டார்.



# இந்தியாவில் கண்டறியப்பட்ட மாறுபாடு இலங்கையில் சமூகப் பரவலடையாது

கொழும்பு, மே 12

இலங்கையிலும் கண்டறியப்பட்ட இந்தியாவில் பரவியிருக்கும் கொரேனா வைரஸின் புதிய மாறுபாடு நாட்டில் சமூகப் பரவலடைய வாய்ப்பில்லை என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக நேற்று (செவ்வாய்க் கிழமை) ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டுள்ள அமைச்சரவை இணை செய்தித் தொடர்பாளர் அமைச்சர் உதய கம்மன்பில, இந்தியாவில் பரவியிருக்கும் பி .1.617 மாறுபாடு அரசாங்க தனி மைப்படுத்தப்பட்ட மையத்தில் தனிமைப்படுத்தப்பட்ட ஒரு நபரிடம் கண்டறியப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார். ஒரு தனிமைப்படுத்தப்பட்ட மையத்தில் இந்த வைரஸ் கண்டறியப்பட்டதால், இது ஒரு சமூக பரவல் அச்சுறுத்தலை ஏற்படுத் தாது என்பதை இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே உறுதிப்படுத்தியுள்ளார் என அவர் குறிப்பிட்டார்.

இந்திய மாறுபாட்டால் பாதிக்கப்பட்ட தனிநபர் சமூகத்திற்குள் வெளிப்படுத்தப்படாதமையால் சமூக பரவல் அச்சுறுத்தலை ஏற்படுத்தாது என்று சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே கூறியுள்ளார்.

இதற்கிடையில், தடுப்பூசி ஓர் உத்தரவாதமல்ல என்றும் இந்தியாவில் பரவும் பி.1.617 மாறுபாடு தடுப்பூசியின் பாதுகாப்பை மீறக்கூடும் என்றும் ஐக்கிய நாடுகள் சபை எச்சரித்துள்ளது.

ஐ.நா. உலக சுகாதார அமைப்பின் தலைமை விஞ்ஞானி, மியா சுவாமிநாதன் ஒரு வெளிநாட்டு செய்தி நிறுவனத்திடம், பி 1.617 என்ற மாறுபாட்டின் தொற்றுநோயியல் அம்சங்கள் அசல் வைரஸைவிட ஆபத்தானவை என்றும் விரைவாகப் பரவுகிறது என்றும் பெரும்பாலும் கடந்த கால தடுப்பூசி பாதுகாப்புகளை நகர்த்தக்கூடும் என்றும் கூறியுள்ளார்.






## ஒரேநாளில் 30 ஆயிரம் பி.சி.ஆர். சோதனை நடத்தத் திட்டமாம்

கொழும்பு, மே 12

ஒரு நாளைக்கு நடத்தப்பட வேண்டிய பி.சி.ஆர். பரிசோதனைகளின் எண்ணிக்கையை 24 ஆயிரத்தில் இருந்து 30 ஆயிரமாக உயர்த்த சுகாதார அதிகாரிகள் திட்டமிட்டுள்ளனர்.

தற்போது ஒரு நாளைக்கு 24 ஆயிரத்துக்கும்மேற்பட்ட பி.சி.ஆர்.சோதனைகள் நடத்தப்படுகின்றன என அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

எனினும் நாட்டில் அதிகரித்து வரும் கொவிட் - 19 நிலைமையைச் சமாளிக்க அதை சுமார் 30 ஆயிரம் ஆக உயர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பி.சி.ஆர். சோதனை முடிந்ததும் முடிவுகள் வெளிவரும் வரை மக்களை தனிமைப்படுத்தலில் இருக்குமாறும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.


### சிறுநீரகம் தேவை

32 வயதுடைய A+ குருதி வகையைச் சேர்ந்த ஆண் சிறுநீரக நோயாளி ஒருவருக்கு A+ அல்லது A- அல்லது O+ அல்லது O- Group வகையைச் சேர்ந்த சிறுநீரகத்தைத் தானமாக வழங்கக் கூடியவர் தொடர்பு கொள்ளவும். தகுதி உடையவருக்குத் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:- SANJU
076 531 4995
075 576 0264


## மொனராகலை முடக்கப்படுகிறது

மொனராகலை நகரம், இன்று (புதன்கிழமை) முதல் ஒரு வாரத்திற்கு முடக்குவதற்கு தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மொனராகலை பிரதேச செயலாளர் தலைமையிலான குழுவே இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை மொனராகல நகரம் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் சடுதியாக அதிகரித்துள்ளமையின் காரணமாகவே இந்த திடீர் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது என அந்தக் குழு சுட்டிக் காட்டியுள்ளது.






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 12.05.2021இல் வெளியிடப்பெற்றது.